**27 x 2015** சம்பவங்கள்: 20 ஆண்கள் 7 பெண்கள்

**கடத்தல்கள்**: இவர்களில் ஒருவர் மட்டுமே "வெள்ளை வாகனத்தில்" சாதாரண உடையில் வந்த பாதுகாப்புப்படை அதிகாரிகளால் கடத்தப்பட்டார். பாதிக்கப்பட்டவர்களில் பதினான்கு நபர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளில் மிகக் கடைமட்ட உறுப்பினர்கள் அல்லது வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டவர்கள். இவர்களில் வயது குறைந்தவர்களும் அடங்குவர். இந்த பதினான்கு பாதிக்கப்பட்டவர்களும் அரசாங்கத்தின் "புனர்வாழ்வு" திட்டத்தில் சென்று வரவில்லை. பதின்மூன்று நபர்கள் மனித உரிமைப் பாதுகாவலர்களாகவோ அல்லது ஜனநாயக அரசியல் செயற்பாடுகளிலோ ஈடுபட்டவர்கள். இவர்கள் தடுத்துவைக்கப்பட்ட காலப்பகுதி சிலநாட்களில் இருந்து பல மாதங்களாகக் காணப்பட்டது.

**குற்றமிழைத்தவர்கள்:** அதிகமானவர்கள் இராணுவ சீருடையும் சாதாரண உடையும் அணிந்திருந்தார்கள். சிலர் மட்டுமே சாதாரண உடைகளில் மட்டும் காணப்பட்டனர்.

**தடுத்துவைக்கப்பட்ட இடங்கள்:** மூன்றுபேர் தாங்கள் 2015 இல் வவுனியாவில் உள்ள ஜோசப் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக நம்புகின்றனர். ஒருவர் கொழும்பில் நான்காம் மாடியில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். மேலதிகமான நால்வர் தாங்கள் இராணுவ முகாம் ஒன்றில் தடுத்துவைக்கப்பட்டிருந்ததாக நம்புகின்றனர். ஆனால் அவர்களுக்கு எந்த முகாம் என்பது தெரியவில்லை. மொத்தமாக இருபத்தி மூன்று பாதிக்கபட்டவர்கள் இரகசிய இடங்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

**பழிவாங்குதல்:** பாதிக்கப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டபின் அவர்களது குடும்பங்கள் பழிவாங்கலுக்கு முகங்கொடுத்தனர். ஒருவரைத்தவிர ஏனைய அனைவரும் இலஞ்சம் கொடுத்தே விடுவிக்கப்பட்டனர்.

**9 x 2016** சம்பவங்கள்**:** 8 ஆண்கள், 1 பெண்

**கடத்தல்கள்:** அனைவரும் வெள்ளை வாகனத்தில் அல்லது வெள்ளை வாகனம் தவிர்ந்த ஏனைய வழிமுறைகளில் சட்டத்திற்குப் புறம்பாக தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள். பாதிக்கப்பட்டவர்கள் பொதுவாக அவர்களது வீடுகளுக்கு அருகாமையிலேயே கடத்தப்பட்டிருந்தனர். ஆறு கடத்தல்கள் வன்னியில் இடம்பெற்றிருந்தன. மிக அண்மையில் இடம்பெற்ற மூன்று கடத்தல்களும் ஆடி மாதம் 16ந் திகதி இடம்பெற்றவை. இவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த காலங்கள் நான்கு நாட்களில் இருந்து இரண்டு மாதங்கள் வரை வேறுபட்டுக் காணப்பட்டன. இதில் மூவர் தமிழீழ விடுதலைப் புலிகளினால் சிறுவயதில் இணைக்கப்பட்டவர்கள். அத்தோடு இவர்கள் அரசாங்கத்தின் "புனர்வாழ்வு" திட்டத்தில் சென்றுவரவில்லை. இதில் நான்குபேர் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர் அல்லது ஜனநாயக ரீதியிலான தமிழ் அரசியல் கட்சிகளுக்காக நியாயமான அரசியற்செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள். இருவர் ஐக்கிய இராச்சியத்திற்கு வந்த பின்னர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள்.

**குற்றமிழைத்தவர்கள்:** இராணுவ உடையும் சாதாரண உடையும் கலந்து அணிந்திருந்தனர். சிலர் AK 47 வைத்திருந்தனர் ஏனையவர்கள் சாதாரண உடையில் காணப்பட்டனர். ஒரு சந்தர்ப்பத்தில கடத்தலில் ஈடுபட்டவர்கள் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு அடையாள அட்டையைக் காட்டினார்கள்.

**தடுத்துவைக்கப்பட்ட இடங்கள்:** அனைத்து இடங்களும் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தெரியாதவாறு இரகசியமாகப் பேணப்பட்டன. வெள்ளை வாகனத்திலிருந்து இறக்கியபின் கிரவல் வீதிவழியாக நடக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் இரும்புக்கம்பிகள் கொண்ட சிறையில் அடைக்கப்பட்டதாகவும் பாதிக்கப்பட்டவர்களில் மூவர் விளக்கினார்கள். இரு சம்பவங்களில் அவர்கள் தாங்கள் வைக்கப்பட்டிருந்த இடத்தின் சுவர்களில் பச்சைப் பூச்சு பூசப்பட்டிருந்ததாகத் தெரிவித்தனர். ஒருவர் தான் வைக்கப்பட்டிருந்த இடத்தில் உலங்குவானூர்தி தரையிறங்கும் சத்தம் கேட்டதாகக் குறிப்பிட்டதுடன் அது ஜோசப் முகாமாக இருக்கலாம் என நம்புவதாகவும் குறிப்பிட்டார். தரகர்கள் மூலம் தனது விடுதலையை பேரம்பேசி விடுவிக்கப்பட்ட மற்றுமொருவர், குறிப்பாக கடத்தலில் ஈடுபட்டவர் தன்னை ஜோசப் முகாமில் தடுத்துவைத்ததாக குறிப்பிட்டார்.

**பழிவாங்கல்:** பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டபின் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராக பழிவாங்கல் நடவடிக்கைகள் காணப்பட்டன.

**ஆதாரம்:** இருபத்தியேழு சம்பவங்களில் இருபத்தியொரு சம்பவங்களுக்கு சுயாதீன தடயவியல் நிபுணர்களிடமிருந்து சட்ட வைத்திய அறிக்கை உள்ளது. மேலதிகமான இரண்டு சம்பவங்களில் ITJP சித்திரவதைத் தழும்புகளை ஒளிப்பதிவு செய்துள்ளது. வைத்திய அறிக்கை நிலவையில் உள்ளது. அத்தோடு பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் சட்டவைத்திய அறிக்கை இல்லாமலே புகலிட தஞ்சம் வழங்கப்பட்டுள்ளார்.

**முதன்மைநிலை அலுவலர்கள்:** மூன்று சம்பவங்களில் விசாரணையாளர்கள் முதன்மைநிலை அதிகாரிகளை உள்ளடக்கியிருந்ததாகத் தோன்றியது. இவர்களில் ஒரு ஆண் தனக்கு சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த படத்தில் ஒருவர் மகிந்த ராஜபக்சவுடன் கைலாகு கொடுத்துக்கொண்டிருந்ததையும் அவரைச் சுற்றி பலர் நின்றதையும், சுவரில் மாட்டப்பட்டிருந்த புடத்தில் இருந்த ஒருவர் விசாரணை இடம்பெற்ற இடத்தில் நின்றது ஞாபகம் இருப்பதாகவும் கூறினார். விசாரணை செய்தவர்களில் ஒருவர் முதன்மைநிலை அதிகாரியாக இருக்கலாம், ஏனெனில் அவரை ஏனைய அதிகாரிகள் நடத்திய முறையைப் பார்த்து தான் அவ்வாறு எண்ணுவதாக மற்றுமொரு பாதிக்கப்பட்டவர் குறிப்பிட்டார். மூன்றாவது பாதிக்கப்பட்டவர் தன்னை முதன்மைநிலை அதிகாரி ஒருவர் காண வந்ததாகவும், அந்த அதிகாரியின் சீருடையின் தோள்பட்டையில் சிங்கள எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்ததாகவும் கூறினார்.
.

**ஆதாரம்:** அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பாதிக்கப்பட்டவர்களின் உடலில் காணப்பட்ட தழும்புகள் ஒன்றில் சுயாதீன தடயவியல் நிபுணரால் பரிசோதிக்கப்பட்டது அல்லது ITJP விசாரணையாளர்களால் ஒளிப்பதிவு செய்யப்பட்டது. முழுமையான மருத்துவ அறிக்கை நிலுவையில் உள்ளது.

**முதன்மைநிலை அதிகாரிகள்:** இரு சம்பவங்களில் உயர்நிலை அதிகாரிகள் விசாரணையில் ஈடுபட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறினார்கள். மூன்றாவது சந்தர்ப்பத்தில், பாதிக்கப்பட்டவர்கள் சிங்கள மொழியை சிறிதளவு விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருந்ததை அறிந்து சித்திரவதை செய்தவர்கள் ஆங்கிலத்தில் கதைக்க ஆரம்பித்தனர். இது அவர்களது உயர் பதவிநிலையை விளக்குகிறது.

குறிப்பு: UNCAT அறிக்கையைத் தயாரித்த பின்னர் நாங்கள் மேலதிகமான ஆதாரங்களை சேகரித்து இருந்ததால் இங்கு கொடுக்கப்பட்ட எண்ணிக்கை UNCAT அறிக்கையில் கொடுக்கப்பட்ட எண்ணிக்கையில் இருந்து வேறுபடுகிறது.